**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**முன்னிலை : திருமதி. மு.அலிமா, பி.ஏ., எல்.எல்.எம்,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
நாகர்கோவில்.

2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 04–ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண் 89/2023–ன்**

**இ.ம.எண். 3/2023**

B. கிருபாகரன் . . . மனுதாரர் / வாதி

/ எதிர் /

S. தங்கதுரை . . . எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவானது 26.11.2024–ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு, B. கணேசமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. C. அழகேசன் அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் செய்யாத நிலையில், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்யாததால் 21.02.2024 அன்று ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர் தரப்பு வாத உரை ஆகியவைகளை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்துவந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உ த் த ர வு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் பிரிவு 151–ன் கீழ் வழக்கு பட்டிகை சொத்தின் கதவை திறக்க செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2024.12.04 15:10:10 +0530

**2) <u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்</u>:–**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு சொந்தமான கடையை வாடகைக்கு எடுத்து அதில் நாஞ்சில் காட்வேர்ஸ் என்ற பெயரில் கடை வைத்து பெயின்டிங் மற்றும் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் சம்பந்தமான பொருட்கள் வைத்து தொழில் செய்து வருகிறார் என்றும், மனுதாரர் தொழில் செய்து வருவது பிடிக்காமல் எதிர்மனுதாரர்/பிரதிவாதி கடையை உடனே காலி செய்து தர கேட்டு அடிக்கடி பிரச்சனை செய்து வந்ததால் நேசமணி நகர் காவல்நிலையத்தில் மனுதாரர் புகார் கொடுத்தார் என்றும், அப்புகார் சம்பந்தமாக நேசமணி நகர் காவல்நிலையத்தில் விசாரித்து நேசமணி நகர் காவல் நிலைய மனு ரசீது எண்.25/2023 மனுதாரருக்கு வழங்கப்பட்டது என்றும், அதன்பின்னரும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி ரவுடி ஆட்களுடன் மனுதாரரை கடை நடத்த விடாமல் தொடர்ந்து பிரச்சனை செய்து கொலை மிரட்டல் விடுத்ததால் அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ மனுதாரர் கடை நடத்துவதற்கு எந்தவித தொந்தரவும் இடையூறும் ஏற்படாமல் இருக்க வேண்டி இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு இ.ம.எண்.2/2023 தாக்கல் செய்திருந்தார் என்றும், தற்போது இ.ம.எண்.2/2023 எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு நீதிமன்றத்தால் நோட்டீஸ் சார்பு செய்யப்பட்டு வழக்கின் வாய்தா 26.06.2023 தேதியில் வைக்கப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் மனுதாரரும், மனுதாரரின் மனைவியும் கடையை திறந்து வைத்திருந்த போது எதிர்மனுதாரர்/பிரதிவாதி சில அடியாட்களுடன் மனுதாரர் நடத்தி வரும் கடைக்கு வந்து அசிங்கமாக மனுதாரரையும், மனுதாரரின் மனைவியையும் திட்டி கொலை மிரட்டல் விடுத்து சென்றார்கள் என்றும், பின்னர் 08.06.2023 தேதியில் காலை சுமார் 9.30 மணியளவில் மனுதாரரும், மனுதாரரின் மனைவியும் கடையை திறக்க வந்த போது எதிர்மனுதாரர்/பிரதிவாதி நான்கு அடியாட்களுடன் மனுதாரர் நடத்தி வரும் கடையின் பூட்டை உடைத்து வேறு பூட்டை வைத்து பூட்டி அதை திறக்க முடியாதவாறு வெல்டிங் அடித்து வைத்திருந்தார் என்றும், பின்னர்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2024.12.04 15:10:22 +0530

எதிர்மனுதாரர்/பிரதிவாதி மனுதாரரையும், மனுதாரரின் மனைவியையும் கெட்ட வார்த்தையால் திட்டி கடையை திறந்தால் வெட்டி கொன்றுவிடுவதாக கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், மேலும், எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் அடியாட்களும் மனுதாரரையும், மனுதாரரின் மனைவியையும் கெட்ட வார்த்தையால் திட்டி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், பின்னர் எதிர்மனுதாரர்/பிரதிவாதி அடியாட்களை பார்த்து இவர்களிடம் என்ன பேச்சு என சொல்லி அடித்து கொல்லுங்கள் என்றதும் கையில் வைத்திருந்த கம்பி மற்றும் கம்பை வைத்து அடிக்க வந்தார்கள் என்றும், இதுகுறித்து எதிர்மனுதாரர்/பிரதிவாதி மற்றும் அவரது அடியாட்கள் மீது நேசமணி நகர் காவல்நிலையத்திற்கு ஆன்லைன் மூலமாக புகார் கொடுத்தார் என்றும், அப்புகார் Reg.No.RRK23103872 என்றும், மேற்படி புகார் மனு மீது நேசமணி நகர் காவல்நிலையத்தில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீதும், அவரது அடியாட்கள் மீதும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், மனுதாரர் கொடுத்த ஆன்லைன் புகார் மீது நேசமணி நகர் காவல்நிலையத்தில் மனு ரசீது எண் 288/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இதனால் நாகர்கோவில் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் கொடுத்தார் என்றும், ஆனால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், மேலும் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு காவல் அதிகாரிகளும் உடந்தையாக செயல்பட்டு வருகிறார்கள் என்றும், தற்போது மனுதாரரின் கடைக்குள் சுமார் ரூ.8,00,000/–ற்கும் மேலான பொருட்கள் உள்ளது என்றும், பொருட்கள் வாங்க வரும் வாடிக்கையாளர்கள் தினமும் வந்து திரும்ப செல்கிறார்கள் என்றும், தேர்வுக்கு படித்து வரும் மனுதாரரின் மனைவியின் புத்தகம் மற்றும் நோட்டுகள் கடைக்குள் உள்ளது என்றும், மேலும் பெண்கள் குழுவின் வரவு செலவு நோட்டுகள் கடைக்குள் உள்ளது என்றும்,. இந்த பெண்கள் குழுவின் நோட்டுகள் வாரந்தோறும் மனுதாரரின் மனைவி குழுவின் உறுப்பினர்கள் முன்பு சமர்ப்பிக்க வேண்டியுள்ளது என்றும், கடையை திறக்காததால் மனுதாரர்/வாதிக்கு தற்போது வரையில் மூன்று லட்ச ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், ஆதலால் மனுதாரர் கடையை நடத்த முடியாதவாறு எதிர்மனுதாரர்/பிரதிவாதியும் அவரது

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2024.12.04 15:10:39 +0530

அடியாட்களும் தொடர்ந்து பிரச்சனை செய்து வருவதால் வழக்கு பட்டிகை சொத்தில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி வெல்டிங் வைத்து மனுதாரர்/வாதியின் பூட்டை திறக்க முடியாமல் செய்துள்ளதை மாற்றி நீக்கம் செய்து செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க வேண்டி மனுதாரர்/வாதியால் இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்/பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் முன்னிலையாகியும், எதிருரை தாக்கல் செய்யாத நிலையில், ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார்.

4) இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை</u>** :

மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் / வாதியால் அசல் வழக்கானது வழக்கு பட்டிகை சொத்தை வாதி அமைதியாக அனுபவம் செய்து வருவதை பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) மனுதாரர் / வாதியால் இம்மனுவானது வழக்கு பட்டிகை சொத்தின் கதவை திறக்க எதிர்மனுதாரருக்கு செயலுறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) இம்மனுவுடன் மனுதாரர் தரப்பில் 08.06.2023 தேியில் நேசமணிநகர் காவல் உதவி ஆய்வாளர் அவர்களுக்கு ஆன்லைன் மூலமாக அனுப்பிய புகார் மனு நகல் மேற்படி புகார் மனுவிற்கான கணினி ரசீது, 08.06.2023 தேதியில் காவல்கண்காணிப்பாளர் அவர்களுக்கு மனுதாரரால் பதிவு தபால் ஒப்புதல்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2024.12.04 15:10:50 +0530

அட்டையுடன் அனுப்பிய புகார் மனு நகல் மற்றும் அதற்கான தபால் ரசீது அசல், 08.06.2023 தேதியில் காவல் உதவி ஆய்வாளர் அவர்களுக்கு பதிவு தபால் ஒப்புதல் அட்டையுடன் அனுப்பிய புகார் மனு நகல், மற்றும் அதற்கான தபால் ரசீது அசல், 18.06.2023 தேதியில் நாகர்கோவில் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு நேரடியாக கொடுத்த புகார் நகல், தபசில் கடை பூட்டை உடைத்து மாற்று பூட்டு போட்டு பூட்டி வெல்டிங் செய்து வைத்திருக்கும் புகைப்படம், மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஆனால் மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணங்கள் இம்மனுவில் சான்றாவணங்களாக குறியீடு செய்யப்படவில்லை. மேற்படி ஆவணங்களை குறியீடு செய்யாததற்கான தகுந்த காரணங்களும் மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்படவில்லை.

8) அசல் வழக்கு கோப்பின் பரிசீலனையில் இருந்து, மனுதாரர்/வாதியால் அசல் வழக்கானது 17.05.2023 ல் தாக்கல் செய்யப்பட்டு 01.06.2023 ல் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது என்பதையும், அசல் வழக்குடன் மனுதாரர் வாதியால் இ.ம.எண்.2/23 மனுவானது வழக்கு பட்டிகை சொத்தை வாதி அமைதியாக அனுபவம் செய்து வருவதை பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும், மேற்படி இ.ம.எண். 2/23 மனுவின் இன்றைய தேதியில் உத்தரவிற்காக நிலுவையில் உள்ளது என்பதையும், மேலும், இம்மனுவின் எதிர்மனுதாரரால் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையை பரிசீலிக்கும் போது, அதில்,

> “...the petitioner closed the said respondent’s shop permanently by welding it so that the respondent could not open it and the petitioner is opened Two big sticker shop named Nila Stickers & Car Jewells 200 feet away from it. Therefore, even though the petitioner does

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2024.12.04 15:11:03 +0530

> not need the respondent's shop the petitioner's intention to make the respondent suffer, he has brought this case against the respondent and is making the old age respondent suffer..."

என தெரிவித்துள்ளார் என்பதையும், இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

9) மேற்கண்ட எதிர்மனுதாரர் தரப்பு எதிர்வழக்குரையின் பரிசீலனையில் இருந்து எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மனுதாரரே தபசில் கடையை நிரந்தரமாக பூட்டி வெல்டிங் வைத்து திறக்க முடியாதவாறு செய்துள்ளார் என்றும், மேலும் மனுதாரர் நிலா ஸ்டிக்கர் மற்றும் கார் ஜீவல்ஸ் 200 அடிக்கும் அப்பால் உள்ளது என இரண்டு பெரிய ஸ்டிக்கர்களை ஒட்டியுள்ளார் என்றும், வாதிக்கு தபசில் கட்டிடம் தேவையில்லை என்றும் பிரதிவாதியை கஷ்டப்படுத்துவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் தெரிவித்திருப்பதை இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

10) தற்பொழுது அசல் வழக்கானது ஆரம்ப நிலையில் உள்ளது. அசல் வழக்கின் முழுமையான சாட்சி விசாரணைக்கு பிறகே இந்நீதிமன்றத்தால் இரு தரப்பினர்களுக்கிடையேயான கீழ்க்கண்ட முக்கிய பிரச்சனைகளான,

i) தபசில் கடையினை பூட்டி அதை திறக்க முடியாதவாறு வெல்டிங் வைத்து அடைத்து வைத்திருப்பவர் மனுதாரரா? அல்லது எதிர்மனுதாரரா? என்பது குறித்தும்,

ii) தபசில் கடையானது வாதியின் உண்மையான மற்றும் செயலில் ( actual and active possession) உள்ள அனுபவத்தில் உள்ளதா? என்பது குறித்தும்,

iii) வாதிக்கு வழக்கு தாக்கல் செய்ய வழக்குமூலம் உள்ளதா? என்பது குறித்தும் இந்நீதிமன்றத்தால் முடிவு காண இயலும்.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2024.12.04 15:11:14 +0530

11) மேலும், மனுதாரரால் இம்மனுவில் கேட்கப்பட்டுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் தொடர்பாக வழக்குரை பரிகாரத்தை திருத்தம் செய்ய எவ்வித நடவடிக்கையும் இதுநாள் வரை மனுதாரரால் மேற்கொள்ளப்படவில்லை.

12) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கது அல்ல என இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

13) **இறுதியாக,**

இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. தரப்பினர்கள் தங்கள் செலவுத்தொகைகளை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2024ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 04-ம் நாளாகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2024.12.04 15:11:30 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
நாகர்கோவில்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2024.12.04 15:11:40 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
நாகர்கோவில்.

P*DM, Nagercoil.*
*Draft/Fair common Order*
*I.A.No. 3/2023*
*in O.S.No.89/2023*
*Date: 04.12.2024.*